185

ஸ்ரீ தந்வந்தரயெ நம:

# வைத்ய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை

Vol. 13. | JUNE 1951. | No. 6

MADRAS 2 JUL 1951



श्रीसुधादिसोदरौषधीशसंभवोज्वला
धीविलासहेतुगोप्रसारशोधितान्तरा॥
कामदा कलावती कवीन्द्रवर्णिता परं
...ाश्रया विभातु वैद्यचंद्रिका॥

...டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.
: பண்டிட் P. S. ராமசர்மா, கரூர்.

வருஷ சந்தா 5—0—0

199585

கோட்டக்கல்

**ஆர்ய வைத்தியசாலையின்**

**மருந்துகள் எல்லா வித வியாதிகளையும் பூர்ண குணப்படுத்துவதுடன், வைத்தியர்களின் கீர்த்தியையும் பாதுகாக்கிறது.**

எல்லா வித நோய்களுக்கும் பூர்ண பரிஹாரம் தேடுகிறவர்கள் எங்கள் தலைமை வைத்யர்

**P. M. வாரியரை**

நேராகவோ, தபால் மூலமாகவோ

**யோஜனை கேட்டு பலன் அடையலாம்.**

**நரஸிம்ம ரஸாயனம், க்ஷீரபலா**

முதலிய மருந்துகளின் சிறப்பு நிகரற்றது.

எங்கள்

**“பாடாதி சூரணம்”**

பல்லின் இகறில் சீ வருவது, ரத்தம் வருவது, அரிப்பு, பல் ஆட்டம், பல் தேய்ந்து போவது, முதலிய பல் இகற் சம்பந்தமான நோய்களை முற்றிலும் தீர்த்து, பல்லிற்கும், இகறுக்கும் வலுவூட்டக் கூடியது. ஆகாரத்திற்கு முன் இச்சூர்ணத்தை தேனில் கட்டியாகக் குழைத்து இகறிலும், பல்லிலும் தடவி அழுத்தி தேய்த்து சிறிது நேரம் கழித்து வென்னீரினால் கொப்பளிக்கவும்.

கள்ளிக்கோட்டை, பாலக்காடு, திரூர், ஈரோடு பிராஞ்சுகளில் நல்ல பயிற்சியும், திறமையும் வாய்ந்த எங்கள் உதவி வைத்யர்கள் எப்பொழுதும் இருப்பார்கள்.

*Manager,*

**Arya Vaidyasala, Kottakal P. O.,**

**S. MALABAR.**

## பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பொருளில்லாத சுதந்திரம் | 1 |
| 2. | दण्डकज्वर: (Dengue Fever) | 3 |
| 3. | வைத்திய செய்திகள் | 10 |
| 4. | சித்தர் முறை (பண்டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.) | 71-80 |
| 5. | போபதேவர் சதகம் (பண்டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.) | 67-70 |

காப்பக நூலகம் 19585

உ

# பொருளில்லாத சுதந்திரம்.

நமது தேசத்திற்கு விடுதலை கிடைக்கப் போவதாக பல காலம் முயற்சி செய்து யானை வாயிலிருந்து கரும்பை திருப்பி இழுத்து எடுத்துச் சிறிது சேதமடைந்தும் அடையாமலும் இருக்கும் நிலைமையில் அதை அனுபவிக்க நாம் சரியான வழியில் முயற்சிக்காமல் சாறை மட்டிலும் ஏகபோகமாகச் சிலர் அனுபவிக்க, சக்கையை வைத்துக்கொண்டு பலர் ரஸமில்லாத வாழ்க்கை நடத்தி வருவது நமது தேசத்தில் தற்சமயம் பலரும் அனுபவித்து வரும் காக்ஷி. ஏழைகளுக்கு உடுக்கத் துணி இல்லை. படுக்க இடம் இல்லை. உண்க ஒன்றுமில்லை. நோய் தீர்க்க நல்ல மருந்துமில்லை. நோய்க்கோ ஓர் அளவுமில்லை. இம்மாதிரியான ஓர் காலம் நேருவதற்கு நாம் என்ன தீவினை செய்தோமென்று நினைக்கப் புரியவுமில்லை. ஹிட்லர் கிளம்பிய நாள் முதல் நம்மைப் பிடித்த சனியன் ஏழரை வருஷம் என்ற கால அளவையும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. குடிகளின் துன்பங்களை சுகானுபவங்களிலேயே நோக்கமாக புகுந்த நமது பிரதிநிதிகள் கனவிலும் நினைக்க முன் வருவதுமில்லை. பல சாமான்களுக்குக் கட்டுப்பாடு வைத்தும், வைக்காமலும் கள்ள மார்க்கட்டின் பூர்ண ஆட்சியில் நம்மை அடிமைப் பிரஜைகளாகச் செய்தாய்விட்டது. சுக்கு முதல் கஸ்தூரி வரையிலும் தேவையளவில் சுத்தமான சாமான் கிடைக்கும் காலம்கூட ஒன்று

வருமா? அவ்விதம் வந்தாலும் ஏழைகளுக்கு சலிசாகக் குறைந்த விலையில் யார் விற்க முன் வரப்போகிறார்கள். பணக்காரர்கள் ஆங்கில வைத்யத்தையே ஆராதிப்பவர்கள். அவர்களைக் குறித்து கவலையில்லை. ஏழைகள் பாடுதான் திண்டாட்டம். ஆங்கில ஆஸ்பத்திரிகளில் ஏழைகளை யார் திரும்பிப் பார்க்கிறார்கள். நாட்டு வைத்தியர்கள் ஏழைகளுக்கு தர்ம வைத்யம் செய்வது என்ற பரம்பரைக் கொள்கையை இன்னிலைமையில் எவ்விதம் கொண்டு செலுத்தமுடியும். பலவிதத்திலும் நமது சுயராஜ்யம் கஷ்டம் விளைவிப்பது போராது என்று தற்பொழுது அதை எடுத்துச் சொல்லும் பத்திரிகைகளின் சுதந்திரமும் பாதிக்கப்படுகிறது. முன் காலத்தில் குடிகள் தன்னைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்று அறிய அரசர்கள் மாறுவேஷம்போட்டு இரவில் சென்று அறிந்து திருந்துவார்களாம். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி स्नेहंदयांच दाक्षीण्यं अथवा जानकीमपि आराधनायलोकस्य मुंचतोनास्तिमेव्यथा। என்று சீதாபிராட்டியாரைக்கூட பூர்ண கர்ப காலத்தில் பிரஜைகளின் மனதை திருப்தி செய்ய காட்டில் தள்ளி விட்டார். நாமும் ராமராஜ்யம் காங்கிரஸ் காலத்தில் வரும் என்று மனப்பால் குடித்ததற்கும் தற்பொழுது அனுபவிக்கும் கஷ்டத்திற்கும் அதை எடுத்துச் சொல்லமுடியாத சட்டத்திற்கும் எவ்வளவு ஒத்துமை.

---


திருச்சி

ஆயுர்வேதிக் யூயனின் லிமிடெட்.

17 சின்னக்கடைத் தெருவு,

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த

விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.




# दण्डकज्वरः (Dengue Fever.)

இந்த ஜ்வரம் டைபாய்ட் போன்ற பரவும் வியாதியாகக் கருதப்படுகிறது. இதில் முத்தோஷங்களும் ப்ரகோபத்தையடைந்தபோதிலும் வாயுவும், கபமும், அதிகம் ப்ரகோபமடைந்திருப்பதால், வாத ஸ்லேஷ்மப்ரதானமான ஜ்வரமாக இதைச் சொல்லுகின்றனர். இந்த ஜ்வரம் கெடுதல் அடைந்த வாயுவின் மூலம் மனித வர்க்கத்தில் பரவ ஆரம்பிக்கிறது. இது விசேஷமாக வயதானவர்களுக்கும் சிறு குழந்தைகளுக்கும்தான் வரும் இயல்புடையது. இந்த ஜ்வரம் நம் பாரத தேசத்தில் அதிகமாக காணுகிறதில்லையெனினும் ருதுக்களின் மாறுபாட்டால் சில இடங்களில் உண்டாகத்தான் செய்கிறது. இந்த ஜ்வரம் வரும் பொழுதே இடுப்பு போன்ற மூட்டுகளில் தடிகொண்டடிப்பது போல் அதிக வேதனையுடன் வருவதால் இதற்கு "தண்டக ஜ்வரம்" என்று பெயரிட்டனர். இந்த ஜ்வரத்தில் விஸர்ப்பத்தைப்போல் உடல் முழுவதும் ரக்த வர்ணமாகி ஆங்காங்கு சிகப்பு கோளங்கள் (Rashes) உண்டாகும் இவை ஜ்வரம் வந்த மூன்று அல்லது நான்காம் நாள் வெளிக்கிளம்பி, பிறகு தன்னைப் போல் மறைந்துவிடும்.

சில சமயம் சிலருக்கு உடல் முழுவதும் கருப்பாகவும் ஆகக்கூடும் இந்த ஜ்வரம் பொதுவாக 1 அல்லது 2 நாட்கள் இருந்து தானகவே குறைந்து மறுபடியும் 3, 4 நாட்களுக்குப் பிறகு திருப்பிக்கொள்ளும். ஜ்வரம் வரும்பொழுதே அதனுடன் நெஞ்சுவலி, தலைவலி, மூட்டுக்களில் தாங்கமுடியாத வேதனை, காஸம், ப்ரதிச்யாயம், போன்ற உபத்ரவங்களும் வருகின்றன. சாமான்யமாக இந்தஜ்வரம் எட்டாவது நாள் சமனத்தையடையும். ஆனால் ஜ்வரம் சென்ற பிறகும் சில மாதங்கள் வரை இடுப்பில் வலி மட்டும் தொடர்ச்சியாக இருக்கும். இதனால் ரோகி சில நாட்கள் வரை நன்றாக நடக்கும் சக்தியை இழந்து கஷ்டப்படுவான்.

रूपम्:—முதலில் ஒரு முட்டில் வலி உண்டாகி, பிறகு படிப்படியாக எல்லா மூட்டுகளிலும் தாங்கமுடியாத வலியுடன் ஜ்வரம் வர ஆரம்பிக்கும். இடுப்பு, மூட்டுகளிலுள்ள தசை நாறுகள் இவைகளில் தாங்கமுடியாத வேதனையும், முகமும் கண்களும் ரக்தவர்ணமாகவும், மலபந்தம் சிலசமயம் புப்புஸத்தில் பலஹீனமும் இதில் நன்றாக தெரிந்துகொள்ளலாம் இந்த ஜ்வரத்தில் தேஹோஷ்ணநிலை 102° யிலிருந்து 106° வரை அதிகரித்துச் செல்லும் கைநாடியின் கதி மந்தமாகக் காணப்படும்.

**प्रथमाक्रमणे लक्षणानि:**— எதிர்பாராமல் ஜ்வரத்தின் ஆக்ரமணம் குளிர், தாங்கமுடியாத தலைவலி, நேத்ரகோளங்களில் வேதனை, மாம்ஸ பேசிகளிலும், ஸந்திகளிலும் வேதனை, தேக உஷ்ணநிலை 103° to 106° வரை அதிகரித்தல் முதலியவைகள் ஜ்வரம் உண்டானவுடன் காணக்கூடிய லக்ஷணங்கள். பெரும்பாலும் முதல் நாள் ஜ்வரம் அதிகமாகவும், கைநாடியின கதி வேகமாகவும் இருக்கும். இதைத்தவிர வாய்ப்புண், குமட்டல், வாந்தி, முதலான லக்ஷணங்களும் காணுகின்றன.

**प्रथमोपशमकाल:**— விசேஷமாக இந்த ஜ்வரம் மூன்றுவதுநாள் குறைய ஆரம்பிக்கிறது. அப்பொழுது அதிஸாரமும், வியர்வையும் உண்டாகும். மூட்டுக்களிலும், தலையிலும் கொஞ்சம் வலி குறைந்து காணப்படும். மூக்கின் வழியாக அநேகமாக இப்பொழுது ரக்தஸ்ராவமும் உண்டாகிறது. இவ்விதம் ஜ்வரம் குறைந்த மூன்றுவது நாளிலிருந்து மூன்று நாட்கள் இருக்கும்.

**उत्तराक्रमणे लक्षणानि**— மூன்று நாட்களுக்குப் பிறகு மறுபடியும் ஜ்வரமும், வலியும் உண்டாகிறது. 6வது நாள் தேஹோஷ்ணநிலை கிட்டத்தட்ட 100° இருக்கும். அது 24 மணி நேரத்துக்குள் மேலும் அதிகமாகும். முதல் ஆக்ரமணத்தைவிட இரண்டாவது ஆக்ரமணத்தில் கொஞ்சம் மிருதுவான லக்ஷணங்களே காணப்படுகிறது. இப்பொழுது இந்த ஜ்வரம் 24 மணியிலிருந்து 36 மணி வரைதான் நிலைத்து நிற்கும் ரக்த நிறமான கோளங்கள் முதலில் கைதலத்திலும் பிறகு கைதலத்தின் பின்புறமும், கழுத்து, கால் இவைகளிலும் க்ரமமாக உண்டாகின்றன. இவைகளை கைகொண்டு தேய்த்தால் கொஞ்சநேரத்தில் மறைந்து, கடைசியில் உடல் முழுவதும் ஏராகாரமாக இந்த கோளங்கள் ஒன்று சேர்ந்துவிடுகின்றன. சிலருக்கு சில சமயம் இந்த கோளங்கள் காணப்படுகிறதில்லை. ரோமாந்திகா (Measles) ரக்தஜ ஜ்வரம் இவைகளைப்போல் இந்த நோய் இருந்தபோதிலும் மனிதர்களிடம் பரவுவதில் வித்யாசம் இல்லாமலில்லை. ஜ்வரத்தை அபேக்ஷிச்சு நாடியின் கதி கொஞ்சம் மந்தமாகவே தோன்றும். ரக்தத்தில் ஸ்வேதாணுக்களின் (White cells) எண்ணிக்கை குறைந்திருக்கும்.

**वेदनास्वभाव:**— (வலியின் ஸ்வபாவம்) இடுப்பைக்காட்டிலும் முழங்கால் மூட்டில் அதிக வேதனை ஆனால் மூட்டுக்களில் வீக்கம் தென்படாது மூட்டுக்களைத் தொட்டுப் பிடித்தாலும் அதிக வேதனை உண்டாகிறதில்லை. ரோகியை மற்றவர்கள் தூக்கி இடம் மாற்றும்பொழுது, அந்த நோயாளிக்கு வலியே தோன்றுது. ஆனால் ரோகி நடந்து செல்ல முயற்சித்தால் வலி மேலும் அதிகமாகத்தான் செய்யும்.



**ஜ்வரம் விட்டபிறகு உள்ள லக்ஷணங்கள் :**— ஜ்வரம் விட்ட பிறகும் சில மாதங்கள் வரை ஸந்திகளில் சிறிது வலி இருந்து கொண்டே இருக்கும் ரோகி மிகவும் அசக்தனுக இருப்பான். ஆலோசனு சக்தியில் சிறிது பலஹீனம் காணப்படும்.

**उपद्रव:**- சிலசமயம் கழுத்திலுள்ள ரஸக்ரந்தி (Glands) கள் வீக்கத்தையடைந்து, ரோகிக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கும். சிலசமயம் மூக்கு த்வாரங்கள் வழியாக ரக்தம் வெளி வருதலும் வ்ருஷணத்தில் எரிச்சலும் அல்லது சிறியசிறிய கொப்பளங்களும் உண்டாகலாம்.

**चिकित्सा।** — நோயாளி இருக்கும் அறை சுத்தமாக இருக்க வேண்டும் பகல் வேளைகளில் சூரிய வெளிச்சம் உட்புறம் பரவும்படி ஜன்னல் கதவுகளை திறந்து வைக்கவேண்டும். ஆனால் சூரிய வெளிச்சம் நேரிடையாக அந்த அறையில் பரவக்கூடாது அந்த அறை நல்ல காற்றோட்டமுள்ளதாக இருக்கவேண்டும். காலை மாலை இருவேளையும் க்ருமிகளைக் கொல்லக்கூடிய தூபங்கள் போடவேண்டும் நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் ரோகியைப் படுக்க வைக்கவேண்டும் ஆனால் நேரிடையாக வீசும் காற்றில் ரோகியை படுக்கவிடக்கூடாது. நோயாளி அவன் உடம்பில் பரவியுள்ள சிகப்பு கோளங்கள் (Rashes) மறையும் வரை படுத்தவாரே இருக்கவேண்டுமேயொழிய, ஆயாஸத்தைக் கொடுக்கக்கூடிய காரியங்களைப் புறக்கணிக்கவேண்டும்.

வலியுள்ள இடத்தில், உப்புகலந்த சூடான ஜலத்தால் ஸேகம் செய்யவேண்டும். பிறகு நன்றாக உலர்ந்த துணியால் அந்த இடத்தை கட்டி வைக்கவேண்டும். அபின் சேர்ந்த ஔஷதங்கள் கொடுப்பதால் வலி உடனே நின்று ரோகிக்கு சற்று சுகத்தைக் கொடுக்கும். மலபந்தம் இருந்தால் அதைப் போக்கடிப்பதற்கு முதலில் முயற்சிக்க வேண்டும். வலியைக் குறைப்பதற்கும், தீவ்ரமான லக்ஷணங்களைக் குறைப்பதற்கும் உடனே சிகிச்சை செய்ய முற்படவேண்டும் இல்லாவிடில் நோயாளிக்கு கெடுதலைத் தான் விளைவிப்பதாக ஆகும். ரோகியின் பலஹீனத்தைக் குறைப்பதிலும் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

ஜ்வரத்தின் ஆக்ரமண சமயத்தில் பஞ்ச ஸகார சூர்ணமோ அல்லது மாக்னீஷியம் ஸல்பேட் கொண்டோ பேதிக்கு கொடுத்து கோஷ்டத்தை சுத்தி செய்யவேண்டும். ஜ்வரம் அதிகமாக இருந்தால் அப்பொழுது நோயாளிக்கு காய்ச்சின பசும்பாலைத் தவிர கஞ்சியோ மற்றதோ ஆகாரமாகக் கொடுக்கக்கூடாது நடுப்பகலில் ஆரஞ்சி ரஸமோ அல்லது த்ராக்ஷையோ கொடுக்கலாம். தலைவலி அதிகமாக இருந்தால் நெற்றியில் ஒரு துணித்துண்டை

போட்டு அதில், பச்சைக் கல்பூரமும் பன்னீரும் (Rose water) சேர்த்து அரைத்து வைத்துள்ள பன்னீர் ஜலத்தை சொட்டு சொட்டாக விட்டுக்கொண்டிருக்கவேண்டும்.

(A) ஜ்வரம் குறைவதற்கு :— லக்ஷ்மீநாராயண ரஸம் 2-2 ரத்தீ வீதம் எடுத்து தசமூல க்வாதத்துடனே அல்லது துளஸி, ப்ராம்ஹீ, சீந்தில்கொடி, வேப்பம்பட்டையின் உட்பாகம், கசப்பு பேப்புடல், கோரைக்கிழங்கு, காஞ்சொரி, ஆகியவைகளை கஷாய விதிப்படி க்வாதம் செய்து அதனுடனும் தினம் காலை, மாலை இருவேளை கொடுக்கவேண்டும்

दशमूलकाथः—பில்வப்பட்டை, முன்னைப்பட்டை, வருவாகைப் பட்டை, பெருகுமிழ், சிகப்புப் பாதிரிப்பட்டை, ஓரிலை, மூவிலை, முள்கத்திரி, கண்டங்கத்திரி, நெரிஞ்சில் இவைகளுடைய பஞ்சாங்கமும் ஸமபாகமாக எடுத்து நன்றாக சூர்ணம் செய்து கஷாய முறைபடி க்வாதம் செய்யவும்

பஞ்சாங்கம்- ("त्वकपत्रफलमूलानि पुष्पंचैकस्य शाखिनः।
पञ्चांगमिति बोद्धव्यं प्राज्ञैरेकत्र मिश्रीतम् ॥" ध. नि.)

मात्रा — தினம் ஒவ்வொரு அவுன்ஸ் வீதம் காலை மாலை இருவேளை பிப்பலீ சூர்ணமோ அல்லது நெய் கலந்தோ கொடுக்கவேண்டும்.

उपयोग:— தகுந்த அனுபானங்களுடன் இந்தக்கஷாயத்தைக் கொடுத்தால் வாதகபஜ்வரம், த்ந்த்ரா, ச்வாஸம், ப்ரமம், அதிகமான வியர்வைவருதல் காஸம் முதலியவைகளைப் போக்கடிக்கும.

अनुपानम् — (1) வாதகபஜ்வரத்தில்-பிப்பலீ சூர்ணம் நெய். (2) ஸன்னிபாதஜ்வரத்தில் — பூலாங்கிழங்கு காகடஸ்ருங்கி, த்ரிகடு முதலியவைகளையும் த்சமூலத்துடன் சேர்த்து கஷாயம் செய்து கொடுக்கவேண்டும். (3) வாதகபோல் பனஸன்னிபாதத்தில் — சுக்கு கோரைக்கிழங்கு சீந்தில்க்கொடி ஆகியவைகளையும் சேர்த்து கஷாயம் செய்து கொடுக்கவேண்டும். கோஷ்ட சோதனம் செய்ய வேண்டுபெனில் திருவிருத்து சூர்ணம் ப்ரகோபமாகச் சேர்த்துக் கொடுக்கவும். (4) ஸ்வாஸம், காஸம் பக்க சூலைகளுடன் கூடிய ஸன்னிபாதத்தில்—பிப்பலி, புஷ்கரமூலம், இவைகளின் சூர்ணத்தை மேற்சொன்ன கஷாயத்துடன் கலந்து கொடுக்கவேண்டும். (5) ஸூதிகா ரோகத்தில் — தசமூலக்வாதத்தில் நெய் கலந்து கொடுக்கலாம், அல்லது ஒரு இரும்புத் துண்டை நெருப்பில் நன்றாகக் காய்ச்சி கஷாயத்தில்போட்டு பிறகு அதை எடுத்துவிட்டு கஷாயத்தில் கொடுக்கலாம். சாராயம்



தகுந்த அளவில் கலந்து கொடுக்கலாம். (6) வாதரக்தத்தில் உண்டாகிற தாங்க முடியாத வலியில் கஷாயத்துடன் பாதி பாகம் பால் கலந்து காய்ச்சி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். தசமூலம்கொண்டு தயார் செய்த நெய்யால் நோயுற்ற இடத்தில் பரிஷேகம் செய்யவேண்டும். (7) வாதஜமூத்ராகாதத்தில் — சிலாஜது, சர்க்கரை இரண்டையும் மேல்சொன்ன கஷாயத்துடன் கலந்து கொடுக்கவும்.

(B) பஞ்சவக்திர ரஸம் அல்லது ம்ருத்யுஞ்ஜயரஸமோ வில்வ இலைச் சாற்றுடன் தேனும் கலந்து தினம் இரண்டு வேளை கொடுத்துவர தண்டகஜ்வரம் சமனத்தையடைய ஆரம்பிக்கும். இதுபோல் ரத்னகிரிரஸம், ஜயந்திவடி, இரண்டும் இந்த ஜ்வரத்தில் நல்ல குணம் தருவதாக இருக்கின்றன.

पञ्चवक्त्र रस: (செய்முறை) — சுத்தி செய்த ரஸம், சுத்தி செய்த கந்தகம், பொரித்த படிக்காரம், பிப்பலி, மிளகு, சுத்தி செய்த வஸ்தநாபி இந்த 6 சாமான்களையும் சம அளவு எடுத்து கருத்த ஊமத்தை இலைச்சாற்றில் நன்றாக அரைத்து ஏழு பாவனைகள் செய்து உளுந்து ப்ரமாணம் குளிகைகள் செய்யவும்

मात्रा:- தினம் இரண்டு குளிகைகள் வீதம் மூன்று வேளை இஞ்சி ஸ்வரஸத்துடன் தேனும் கலந்து கொடுக்கவும்.

उपयोग:— பஞ்சவக்திரரஸம் மிகவும் உஷ்ணவீர்யம், தீக்ஷ்ணம். அதிவ்யவாயி வேதனையை சமிக்கும் குணங்களையுடையது. இதுபோல் (Influenza) ஜ்வரத்திலும் பயமில்லாமல் கொடுக்கலாம். பூயமேஹத்தில் அதிகவலி மூத்திரதடைவு, வீக்கம் முதலானவை இருந்தால், இம்மருந்தைக் கொடுப்பதால், மூத்ரம் தாராளமாக வருவதுடன் வேதனையும் உடனே குறையும். ச்லேஷ்மப்ரதான ஸன்னிபாதத்தில் கபஸஞ்சயம் அதிகமாயிருப்பதால், நெஞ்சில் கங்கு என்ற சப்தம், நாடீகதி கொஞ்சம் வேகமாக இருந்தால் ச்வாஸோச்வாஸத்தின் வேகம் அதிகரித்தல், ப்ரமம், ப்ரலாபம், கபத்தை உமியும் சமயம் கபம் வெண்மையாக இருத்தல், கபம் வெளிவராமல் இருந்தால் சோம்பல், நடுக்கம், தேகம் கனத்திருத்தல் ஆகிய லக்ஷணங்கள் காணப்படும். இதிலும் இந்த ரஸத்தை உபயோகித்தால் நல்ல பலன் கிட்டுகின்றதென நிச்சயமாய்ச் சொல்லலாம்.

ச்வஸனக ஸன்னிபாதத்தின் (Pneumonia) ஆரம்பத்தில் இந்த ஔஷதத்தை கொடுப்பது மேன்மையென அனுபவமுள்ள பெரியோர்களின் கருத்து. விலாப்புரங்களில் வலி உண்டாகி க்ரமமாக அதிகமாகுதல். மூச்சுவிட்டு இழுக்கும் சமயம் கஷ்டம் தோன்றுவதோடு வலியும் உண்டாகுதல், கொஞ்சம் நடந்தால் வேதனை அதிகரித்தல், ஒரே இடத்தில் படுத்திருந்தால் வேதனை

தெரியாமை, ஒவ்வொரு மூட்டுக்களிலும் (விரல்களின் மூட்டுகளிலும்கூட) தாங்க முடியாத வேதனை வலியுள்ள இடத்தில் பிடித்து கட்டுகட்டுவதால் வலி குறைந்து காணப்படுதல், கண் இமைகளில் கனம் தோன்றுதல் கொஞ்சம் பேத்தல், தூக்கமின்மை ஆகிய லக்ஷணங்கள் இந்த ஜ்வரத்தில் காணப்படும். இப்பொழுது எல்லா ஔஷதங்களையும்விட இந்த ரஸமே கார்யகாரியென வ்ருத்த வைத்யர்களின் அபிப்பிராயம்.

सूचना — ஊமத்தையின் மாதகசக்தி தாங்காமல் மிகவும் மயக்கமோ மற்ற உபத்ரவங்களோ உண்டானால், உடனே ரோகிக்கு வேப்பிலை ஸ்வரஸத்தைக் கொஞ்சம் கொடுக்க வேண்டும்.

रत्नगिरि रस (செய்முறை) — சுத்தமான மனோசிலை, சுத்தி செய்த ஹிங்குளம், க்ராம்பு, ஜாதிக்காய், இவைகளை சம அளவாக எடுத்து இஞ்சிச்சாற்றில் நன்றாக அரைத்து அதிலேயே இரண்டு பாவனைகள் செய்து ஒவ்வொரு ரக்தி வீதம் மாத்திரைகள் உருட்டவும்.

मात्रा — 3 மாத்திரைகள் காலை, மாலை, நடுப்பகல் மூன்று வேளையும் தேனில் கொடுக்கவேண்டும். குழந்தைகளுக்கு 1/4 ரக்தியிலிருந்து 1/2 ரக்திவரை கொடுக்கலாம். ஜீர்ண ஜ்வரத்தில் காய்ச்சிய பசும்பாலுடன் கொடுக்கவும்.

उपयोग: — இந்த மருந்தை சிறுகுழந்தை முதல் வயதானவர்கள்வரை அவர்களுக்கு வரக்கூடிய ஜ்வரங்களில் பயமில்லாமல் கொடுக்கலாம். இந்த ஔஷதத்தில் வத்ஸநாபி இல்லாததால் ஹ்ருதய பலஹீனம் உள்ளவர்களுக்கும் மிக்க உபயோகமாக இருக்கிறதென சொல்லத் தேவையில்லை, டைப்பாய்டு ஜ்வரத்தில் வத்ஸநாபி கலந்த மருந்துகள் கொடுப்பதால் பயம் உண்டானால் அப்பொழுது இந்தக் குளிகையை நிர்பயமாய் நிச்சயமாய்க் கொடுக்கலாம். இந்த குளிகை எல்லா வாதரோகங்களிலும், உதர வாதம், குல்மம் முதலிய வகைகளிலும் அனுபவமுள்ள பெரியோர்களால் கொடுத்து நல்ல பலனும் பார்க்கப்பட்டுள்ளது. வாத ரோகங்களில் ஒவ்வொரு குளிகை வீதம் தினம் மூன்று வேளை கொதித்து கொஞ்சம் சூடாறிய ஜலத்துடனோ அல்லது திப்பலி சூர்ணமும் தேனும் கலந்து அதனுடனோ கொடுக்க வேண்டும்.

மித்யாஹார விஹாரங்கள், அஜீர்ணம், ருதுக்களின் மாறுபாடு ஆகிய காரணங்களால் ஆமதோஷம் அதிகமாகி ஜ்வரம் உண்டாகிறது. இந்த ஜ்வரத்தில் முதலில் ஆரக்வதாதி கஷாயம் கொடுத்து, மலத்தையும் ஆமதோஷத்தையும் நீக்கி, தாதுக்களை நிர்தோஷங்களாகச் செய்யவேண்டும். ஆனால் சிலர் இதை விஷமஜ்வரமென விபரீதமாக நினைத்து, க்வினையின் கொடுத்து



ஜ்வரத்தைத் தணிக்க முற்படுகின்றனர் கடைசியில் தோஷங்கள் மேலும் கோபத்தையடைந்து, தாதுக்களில் நன்றாக லீனமாகி ரோகிக்கு கெடுதலை செய்வதுடன், க்வினையின் கொடுப்பவனுக்கும் கெட்ட பெயரையே கொடுக்கிறது. சாமான்யமாக தலைவலி கண்கள் ப்ரகாசமற்றிருத்தல், நாக்கு மலினமாக காணப்படுதல், ஓச்சல், அக்னி மாந்தியம், அருசி, மூத்திரம் மஞ்சள் நிறமாக இருத்தல், மலபந்தம் ஆகியவைகள் இந்த ஜ்வரத்தில் காணக்கூடிய லக்ஷணங்கள். இந்த நிலையில் க்வினையின் கொடுப்பதால் தலை மிகவும் உஷ்ணமாகவும், செவிட்டுத்தன்மை விருக்கங்களின் (Kidny) கார்யங்களில் தடையுண்டாகி மூத்ர தடைவு ஏற்படுதல், தூக்கமின்மை, ஆகிய உபத்ரவங்கள் உண்டாகின்றன. இந்த வியாதியில் கொத்தமல்லிவிதை, சர்க்கரை இண்டையும் அரைத்து போதிய அளவு ஜலத்தில், ஒருமணி நேரம் ஊரவைத்து பிறகு வடிகட்டி, தெளிவான அந்த ஜலத்துடன் இந்த ரத்னகிரிரஸத்தையும் சேர்த்துக்கொடுக்க 4 அல்லது 6 மணிக்குள் தாதுக்களில் லீனமான தோஷங்கள் வியர்வைமூலமும் வெளிவரும். அப்பொழுது தேஹோஷ்ணநிலை 2 அல்லது 4 மணிவரை 102° யிலிருந்து 104° வரை அதிகரிக்கும்.

जयन्तीवटी— (செய்முறை) சுத்தி செய்த வத்ஸநாபி, மிளகு பிப்பலி, பாடக்கிழங்கு, வட்டத்திருப்பி அமுக்கராகிழங்கு, வசம்பு, தாளீசபத்ரம், வேப்பம்பட்டை. இவை சமமாக எடுத்து இடித்து நன்றாக சூர்ணம் செய்து, ஆட்டு மூத்திரத்தில் 12 மணி நேரம் அரைத்து ½ ரக்திவீதம் மாத்திரைகள் உருட்டவும்.

मात्रा:— இரண்டு மாத்திரைகள் தினம் இரண்டுவேளை.

उपयोग:— இது தகுந்த அனுபானங்களுடன் எல்லாவியாதிகளிலும் கொடுக்கலாம், இந்த வடியில் வஸ்தநாபி முக்கிய ஔஷதமாக இருப்பதால் சீக்கிரம் பலன்தரக்கூடியதாக இருக்கிறது. வஸ்தநாபி-ஸ்வேதத்தை உண்டாக்குவதாகவும், மூத்திரத்தைத் தாராளமாக வெளிவரச் செய்வதாகவும், வலியை உடன் குறைப்பதாகவும் இருக்கிறது. நாடியின் வேகத்தையும், அதிக ரக்த ஓட்டத்தையும், உஷ்ணத்தையும் குறைப்பதாகவும், ஜ்வரம், ஸன்னிபாதம், ச்வாஸம் காஸம், ப்ரமேஹம், கோதம், வலி அபிஷ்யந்தம், உதர ரோகங்கள், ப்லீஹை, பாண்டு, வ்ரணம், விஸர்ப்பம், ஆகிய ரோகங்களையும் போக்கடிக்கும் சுபாவமுள்ளதாக வத்ஸநாபி கருதப்படுகிறது. வத்ஸநாபியில் வாதபித்தக்ன குணமிருப்பதால் ஜீர்ணஸந்நியாதத்திலும், அதிக வேதனையிலும் குணம் தரக்கூடியது. இதுகொண்டு லேபம் செய்வதால் கட்டி முதலானவைகளில் ஸஞ்சிதமான ரக்தம், மற்ற இடங்களில் பரவி வீக்கமும் குறைய ஆரம்பிக்கிறது. எப்பொழுதாவது அதிஸாரத்தைப்போல், மலம் வெளிவந்தால் இந்த மாத்திரையை கொடுக்கவும்.

अनुपानम्- 1. பித்தப்ரதானமான ஜ்வரத்தில் காய்ச்சிய பசும் பால் அல்லது நெய். 2. சீதஜ்வரத்தில்:- கோமூத்ரம். 3 ஸன்னி பாதத்தில்:-இஞ்சிஸ்வரஸம் அல்லது மிளகு தேன் 4 ரக்தபித்தத்தில்:- சந்தனத்தின் க்வாதம். 5. கபத்துடன் கூடிய இருமலில்:- தேன். 6. மூத்ரக்ருச்ரத்தில்:- சாதம் வடித்த கஞ்சி. 7. மதுமேஹத்தில்:- கோரைக்கிழங்கு பாச்சோத்திப்பட்டை, கடுக்காய் இவை சேர்த்து தயார்செய்த கஷாயம் 8. ஸ—ராமேஹம்:- கத்தாழைவேரின் ஸ்வரஸம். 9. குல்மத்தில்:- வெல்லம் வென்னீர்.

N. B:— இந்த வடி இவ்விதம் அநேக வருஷங்களாக பல அனுபவமுள்ள ப்ரமுகர்களால் அநேக வியாதிகளில் கொடுக்கப்பட்டு அதன் நல்ல குணத்தையும் புகழப்பட்டிருக்கிறது.

## வைத்திய செய்திகள்.

### கேட்பாரில்லையா ?

" இந்திய வைத்திய மத்திய போர்டு" என்ற பெயரில் ஒரு சபையை இந்திய சர்க்கார் சில வருஷங்களுக்கு முன்பே ஏற்படுத்தினர். அதற்கு இந்திய வைத்தியர்களைப் பதிவு செய்ய G O. No. 231, P. H 1-233, பிரிவு சட்டமியற்றியும் தந்தனர். அதன்படி ஆரம்பத்தில் சுமார் 12000 வைத்தியர்களைப் பதிவு செய்தனர். 1939-ம் வருட கடைசியில் இப்படி பதிவு செய்யும் அலுவலை கைவிடுவதாகக் கூறினர். அதன் பிறகு இடைக் கால சர்க்கார் காலத்தில் பதிவு செய்யாத வைத்தியர்கள் பதிவு செய்து கொள்ள அனுமதிக்கப்பெற்றனர். அதன்படி 1946-ம் வருஷம் முதல் இன்றுவரை சுமார் 4000 மனுக்கள் அனுப்பப்பட்டது. இந்த மனுக்களையெல்லாம் நமது சுகாதார மந்திரி தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார். 4000 மனுக்களில் ஒன்றிரண்டை மட்டும் அங்கீகாரம் செய்து கொண்டதாகத் தெரிகிறது. இது நயவஞ்சனையான நீதி !

ஒன்று எல்லோரையும் குறிப்பிட்டகாலம் வைத்திய படிப்பு படித்து தேர்ந்தால் பதிவு என்று கூறவேண்டும் அல்லது சோப்ரா கமிட்டியின் அறிக்கைப்படி அகில இந்திய வைத்திய போர்டில் சகல இந்திய வைத்தியர்களையும் பதிவு செய்யவேண்டும் அனுவசியமாக ஏழை வைத்தியர்களை எல்லாம் வாட்டுதல் ஜனநாயக நோக்கத்திற்கு முற்றிலும் முரண்பாடுடைய தென்பதை அறியவேண்டும். கிராம வைத்தியம் கிராம சுகாதாரதில் உயிர் நாடியல்லவா ? பெரிய வைத்தியர்கள் கிராமியபக்கம் தலைகாட்டாததுக்குக் காரணம் அவர்களுக்கு வருமானம் போதாமையே என்பதை இந்த சமயத்தில் ஞாபகப்படுத்துகிறேன்.

"தமிழ் சித்தன்" என்ற இந்திய வைத்திய தமிழ்மாத சஞ்சிகையின் ஆசிரியராகவும், பிரசுர கர்த்தராகவும் சென்னை கீழ்பாகம் ராஜாத்தினம் தெரு, ஆர். ரங்கநாதன் அவர்களும், அச்சிடுபவராக நவபாரத் பிரஸ், எஸ். சங்கரன் அவர்களும், நேற்று எழும்பூர்முதல் மாகாண மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் பதிவு செய்து கொண்டனர்.

I-Raja Rathanam Street, Madras 10

27—5—51. G. A. CHALAM.



கஷாயம், திருபலை கஷாயம், சுக்கு கஷாயம், கரிப்பான் ரஸம் இஞ்சி ரஸம், இவைகளில் முறையே எட்டு தடவை பாவனை செய்து பிறகு உலர்த்திப் பொடிசெய்து சரியிடை ஜீனியைச் சேர்த்து தினம் வேளைக்கு அரைத்தோலா வீதம் இருவேளையும் பால் அனுபானத்தில் சாப்பிட ஸகல ரோகங்களும் நிவிருத்தி, யாகும். இது உத்தமமான முறை. (6) திரிபலை, குக்கில், ரஸம், கந்தகம் இவைகளை ஸமயிடை எடுத்து விளக்கெண்ணை சேர்த்து அரைத்து தினம் வேளைக்கு கால் தோலா வீதம் இரு வேளை சாப்பிட மூலம் முதலிய நோய்கள் தீரும். (7) கந்தகம் 4 தோலா ரஸம் தோலா 2, இவைகளை ஒன்றுசேர்த்து குமரி ரஸம் விட்டு ஒரு நாள் முழுவதும் அரைத்து உருட்டி உலர்த்தி குகையில் வைத்து கந்தகம் உருகும்படி ஊதி எடுத்து ஆறவிட்டுப் பொடி செய்து தேன், நெய், அனுபானங்களில் கொள்ளவும். (8) திரிபலை, கந்தகம், கரிப்பான் தூள், இவைகளைச் சமயிடை எடுத்து நன்றாகக் கலந்து சாப்பிட பிணிகள் நீங்கும். (9) ஓர் சுத்தமான வஸ்திரத்தை எருக்கம்பால், சதுரக்கள்ளிப்பால் இவைகளில் வகைக்கு ஏழு தடவை தோய்த்து உலர்த்தவும் பிறகு கந்தகத்தைச் சமயிடையுள்ள வெண்ணை சேர்த்து கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து அந்த வஸ்திரத்தில் தடவவும். முழுவதையும் தடவிய பிறகு அந்த வஸ்திரத்தைச் சுருட்டி சுருளாகச் செய்து ஓர் இடுக்கியால் அந்தச் சுருளைக் தலைகீழாகப் பிடித்துக்கொண்டு நுனி பாகத்தில் தீயிட கந்தகம் உருகி தைலம் வரும். அதை ஓர் பீங்கானில் அல்லது சீசாவில் பிடித்துக்கொண்டு பத்திரப்படுத்தி வேளைக்கு இரண்டு அல்லது மூன்று சொட்டு தகுந்த அனுபானங்களில் சாப்பிடவும். (10) கந்தகம் தோலா ஒன்று மிளகுப்பொடி தோலா ஒன்று, திரிபலைப்பொடி வகைக்குத் தோலா இரண்டு இவைகளைக் கல்வத்திலிட்டு சரக்கொன்னை வேரின் கஷாயத்தால் அரைத்து உலர்த்திப் பொடி செய்து வேளைக்கு அரைத்தோலா முதல் ஒரு தோலா வரை தகுந்த அனுபானத்தில் சாப்பிட சகல ரோகங்களும் தீரும். (11) சரக்கொன்னை வேரின் கஷாயத்தால் கந்தகத்தை அரைத்துச் சந்தண விழுதுபோல செய்து உடம்பில் தடவ (பத்துப்போட) சொரி, சிரங்கு, குஷ்டம் தீரும்.

2. கைரிகம்—கைரிகம் என்ற வடமொழி காவிக்கல்லைக் குறிப்பதாகும். அதில் பல பேதங்கள் இருக்கின்றன. அவற்றுள் பூங்காவி என்பது உத்தமம். இது உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகமாகின்றது. தனித்தும் கூட்டு மருந்துகளிலும் சேருகின்றது. சொரி, சிரங்கு, அரிப்பு, முதலியவைகளில் மேலுக்கு உபயோகமாகின்றது. ரக்தப்பெருக்கு, ரக்தமூலம், ரக்தாதிசாரம், இவைகளில் உள்ளுக்கு உபயோகப்படுகின்றது. இதற்கு சுத்தி நூல்களில் கூறப்படுகின்றது. ஆனால் வெளி உபயோகங்

களுக்கு சுத்தியில்லாமலே உபயோகிக்கலாம். உள்ளுக்கும் சுத்தி அவசியமென அனுபவத்தில் தோன்றவில்லை. சுத்தியில்லாமலே பலதடவை நாம் உபயோகித்திருக்கிறோம். கைரிக சுத்தி—கொஞ்சம் நெய்விட்டு ஓர் இரும்பு பாத்திரத்தில் கைரிகத்தைப் போட்டு அடுப்பேற்றி சற்று சூடு வரும்படி வறுத்து எடுக்கவும். கைரிக சுத்தி—பசும்பாலில் பாவனை செய்து உலர்த்திக்கொள்ளவும் குறிப்பு—பசும்பாலில் பாவனை செய்த வஸ்துக்கள் எல்லாம் சில நாள் வைத்திருந்தால் ஓர் வித அழுகநாற்றம் உண்டாகிறது. ஆகவே தேவைக்குத் தகுந்தபடி அவ்வப்பொழுது சுத்திசெய்து கொள்வது நலம். நாற்றம் உண்டானபோதிலும் குணம் குறைவதில்லை. உள்ளுக்கு உபயோகிக்க ஓர் முறை—பூங்காவி, மாதளம்பூ, இவைகளைச் சமயிடையாக எடுத்துப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். கால் தோலா உட்கொள்ள ரக்தப்பெருக்கு முதலியவை விலகும். மாதளம்பூ என்பது கடைகளில் கிடைக்கும். மாதளை மரங்களில் இருவகையுண்டு. ஓர் வகைக்குப் பூவும் பழமுமுண்டு மற்றொரு வகையில் புஷ்பம் மாத்திரம் இருக்கும் காய் இருக்காது. இந்த வகைப் பூ கடைகளில் கிடைக்கின்றது.

3. காஸீஸம்—இதைத் தமிழில் அன்னபேதி என்பர். இதை அப்படியே உபயோகிப்பது கிடையாது. இது சில இடங்களில் கூட்டு மருந்துகளுடன் சேருகின்றது. உள்ளுக்கு உபயோகமாகின்றது. இது இருவகையென நூல்கள் கூறுகின்றன. ஆனால் நமக்குத் தற்காலம் ஒரே மாதிரியில்தான் கிடைக்கின்றது. இதைப் புடம் போட்டால் சிந்தூரமாகும். அயச்சிந்தூரத்திற்குப் பதிலாக உபயோகிக்கலாம் ஆனால் உண்மையான அயச்சிந்தூரத்திற்கும் இதற்கும் குணத்தில் மிகுந்த மாறுபாடு உண்டு. சுவல்ப குணம் இருப்பதுபற்றி இதை அதற்குப் பதிலாக உபயோகிக்கலாம் சிந்தூர முறை—தேவையான அன்னபேதியைக் கல்வத்திலிட்டு பொடித்து கரிப்பான் ரஸம் விட்டு அரைத்து பில்லை தட்டி காயவைத்து கஜபுடமிட சிந்தூரமாகும். இவ்விதம் இரண்டு அல்லது மூன்று புடமிட துவர்ப்பு நீங்கும்.

4. துவரிகா—இதைப் படிக்காரம் என்றும் சீனிக்காரம் என்றும் தமிழில் சொல்லுவார்கள். இது வடதேசத்துச் சரக்கு ஜயநீர் செய்வதில் இது மிகவும் உபயோகப்படுகின்றது தமிழ் நூல்களிலும் இதன் உபயோகம் மிகுந்து காணப்படுகின்றது. சங்கத்திராவக முறைகளில் இது சேருகின்றது. இது தனித்தும் கூட்டு மருந்துகளிலும் சேருகின்றது. ரக்தப்பெருக்கு முதலியவைகளில் இது குணம் கொடுக்கும். நமது தேசத்தில் கடைகளில் வெளுப்பான ஒரு விதமே கிடைக்கின்றது. வடதேசத்தில் சிகப்பு நிறமுள்ள இனமும் கிடைக்கின்றது. சுத்தி—



சீனிக்காரத்தை நெருப்பில் பொரித்து எடுத்துக்கொள்ளுவது சுத்தியென நூல்களில் கூறப்படாவிட்டாலும் பெரியோர்களின் வாடிக்கையென ஆயுர்வேதப்பிரகாசம் என்ற நூலில் கூறப்பட்டிருக்கின்றது.

5. தாளகம்—இது ஓர் பிரசித்தமான விளைவு சரக்கு. நமது கடைகளில் இருவித தாளகம் கிடைக்கின்றது. கட்டி தாளகம் இவற்றுள் ஓர் விதம் இது குணத்தில் இளப்பமானது. பத்ர தாளகம் அல்லது அடுக்கு தாளகம் என்பது மற்றொரு விதம். இது பொன்னிறமாகவும் அப்பிரகத் தகடு போல தகடுகள் அமைந்ததாகவும் இருக்கும். இதுவே உயர்ந்த இனம். இவ்வகை சில வருஷங்களுக்கு முன் நமது கடைகளில் சுலபமாகக் கிடைத்தது. தற்காலம் கிடைப்பவை அவ்வளவு சிலாக்கியமானவையல்ல. நீளத் தகடுகளாக பெயர்க்கக் கூடியதும் பொன்னிறமானதும்தான் சிரேஷ்டம். தற்காலம் கிடைப்பவைகள் தகடுகளாக பெயர்க்கக் கூடியவையல்ல இருந்தபோதிலும் இதைத்தான் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. கோதந்த தாளகம் என்பது மூன்றாவது வகை இது மங்கலான வெண்மையுடைய கட்டிகளாக விருக்கின்றது. பத்ர தாளகம் போல இது தகடுகள் அமைந்ததல்ல. இதைப் பத்ரதாளகத்திற்கு அடுத்த படியாகப் பெருமைப்படுத்தி நூல்கள் கூறுகின்றன. ரஸரத்ன ஸமுச்சயம் போன்ற முன் நூல்களில் இதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை ஆயுர்வேதப் பிரகாசம் போன்ற பின் நூல்களில் கோதந்த தாளகம் கூறப்பட்டிருக்கின்றது அதாவது—சித்தர்கள் அபிப்பிராயப்படி. தாளகத்தில் பத்ரதாளகம் மிகவும் உயர்ந்தது அதற்கு அடுத்தது கோதந்த தாளகம் என்பதே. ஆகவே பத்ரதாளகம் அல்லது கோதந்த தாளகம் ஆகிய இரு வகைகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள்ளலாம் இந்த வஸ்துவுக்குப் பல குணங்கள் இருப்பதாக நூல்கள் கூறுகின்றன. நாம் அனுபவித்த மட்டில் இதன் பல குணங்களைப் பூர்ணமாக ஒப்புக்கொள்ளவேண்டியதே நூல்களில் கூறப்பட்டுள்ள ரஸம் முதலிய வஸ்துக்களில் தாளகத்திற்குச் சமமான வஸ்து கிடையாதெனவே சொல்லலாம். அப்பிரகத்தின் பெருமையை நாம் குறைத்துப் பேசமுடியாது. இருந்தபோதிலும் தாளகத்தின் ஒப்பற்ற மேன்மையை மறைக்க முடியாது. க்ஷயம், குஷ்டம், நிமோனியா காய்ச்சல், மேகத்தை யொட்டிய வியாதிகள், ஆகிய இவைகளில் இது நிகரற்று விளங்குகின்றது ஷை வியாதிகளில் வேறு எந்த மருந்தும் தாளகத்திற்கு நிகராக முடியாது. நுரையீரல்களில் காணும் புண் (Inflamation) இவைகளை மிகச் சீக்கிரமாக குணப்படுத்துகின்றது. சரீரத்தில் காணும் மேகப் பற்றுகள் முதலியவைகளை நன்கு குணப்படுத்துகின்றது. இருமல்களில் நன்கு குணம் கொடுக்கின்றது, ஆனால் ஆஸ்த்மா

வில் இது பலனையளிப்பதில்லை. ரக்தவாந்தி மிகுந்து இருக்கும் க்ஷய நோய்களில் இது மாத்திரம் தனித்து குணம் கொடுப்பதில்லை. அந்த வகை நீங்கலாக மற்ற க்ஷய நோய்களின் வகையனைத்திலும் இது வியாதியைப் பூர்ணமாகக் குணப்படுத்துகின்றது. ஆகவே க்ஷய நோய்களில் இது முக்கிய மருந்தாகின்றது. இம்மருந்தால் குணமாகிய பிறகு அந்த நோய் திரும்பி வருவதில்லை க்ஷய நோய்களில் சில சந்தர்ப்பங்களை யொட்டி வேறு மருந்துகளையும் இதோடு சேர்த்துக் கொடுக்கவேண்டும். இதைத் தனித்தும் அல்லது கூட்டு மருந்துகளுடன் சேர்த்தும் கொடுக்கலாம் நூல்களில் சொல்லப்படும் எல்லா மருந்துகளிலும் அனேகமாகத் தாளகம் சேருகின்றது. தமிழ் நூல்களிலும் இது விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ் நூல்களில் தாளகம் சேர்ந்த கூட்டு மருந்துகள் மிகச் சுவல்பமே. இதில் களும்பு இருப்பதால் நன்றாகச் சுத்தி செய்யவேண்டும். சுத்தி செய்து பச்சையாக அப்படியே கூட்டு மருந்துகளில் சேர்க்கின்றனர். அவ்விதம் சேரும் கூட்டு மருந்துகள் இருவகைப்படும். எரிப்பு வகை ஒன்று அதாவது தாளகத்தையும் மற்ற மருந்துகளையும் சேர்த்துக் குப்பியில் அடைத்துச் சீலைமண் செய்து சில யாமம் அல்லது நாள் வாலுகாயந்திரத்தில் எரித்து எடுப்பதாகும். இந்த வகை ஆயுர்வேத நூல்களிலும் தமிழ் நூல்களிலும் காணப்படுகின்றது. இவ்வகையைப் பலரும் செய்து வருகின்றனர் மற்ற மருந்துகளுடன் சேர்த்து அரைத்து உபயோகிப்பது இரண்டாவது வகையாகும். இந்த இரண்டாவது வகையும் பலர் செய்து உபயோகிக்கின்றனர். ஆனால் இந்த இரண்டாவது வகையில் தாளகம் நல்ல குணம் கொடுப்பதில்லை தாளகபஸ்மம் கொடுக்கும் குணத்தில் சிறியளவு குணம்கூட பச்சை தாளகம் கொடுப்பதில்லை. ஆனால் துர்குணம் மாத்திரம் செய்கின்றது. நன்றாகச் சுத்தி செய்துவிட்ட போதிலும்கூட பச்சைத்தாளகம் வாந்தி முதலிய துர்குணங்களைக் கட்டாயம் கொடுக்கின்றது. ஆகவே பச்சைத் தாளகத்தில் குணமில்லாமலும் துர்குணம் மிகுந்தும் இருப்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். இதைக் கண்டுதான் பலர் தாளகம் என்றால் பயப்படுகின்றனர். உண்மையில் தாளகத்தைக்கண்டு பயப்பட வேண்டியதில்லை. அதைப் பஸ்மமாகச் செய்துவிட்டால் துர்குணம் மிகவும் குறைந்துவிடுகின்றது. இரண்டு மாதக் குழந்தை முதல் 70 வயதானவர்கள் வரை நாம் பலதடவைகளில் பல நோய்களில் மாதக்கணக்காய் கொடுத்தும் துர்குணமே கிடையாதென்றும், எதிர்பார்க்கும் குணங்கள் குறைவின்றியிருப்பதையும் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். சில சமயங்களில் சற்று துர்குணம் காணப்படுமாகில் இரண்டு நாட்களுக்கு மருந்தை நிறுத்தினால் துர்குணம் மறைந்துவிடுகின்றது. மறுபடியும் முன்போலவே கொடுக்கலாம். தாளக பஸ்மத்தை நாம் பல வருஷங்களாக உபயோகித்ததில் காணப்பட்ட துர்



குணங்களைக் குறிப்பிடுகிறோம். சுமார் 60 வயதுள்ள ஒருவர் ஆஸ்த்மா நோயால் வருந்தி வந்தார் சுமார் முப்பது வருஷங்களாக அவருக்கு அந்த நோய் துன்பம் அளித்துவந்தது. அவருக்குத் தாளக பஸ்மம் கொடுக்கப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பிறகு அவருடைய இரண்டு கால்களிலும் சற்று வீக்கம் ஏற்பட்டது. வேறு துர்குணங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இந்த வீக்கம் தாளக பஸ்மத்தால் இருக்கலாமோ என்று சந்தேகித்து மருந்தை நிறுத்தியதில் 2, 3 நாளில் வீக்கம் பூர்ணமாகத் தானே மறைந்து விட்டது. இந்த ஒரு நபரைத் தவிர மற்றெவருக்கும் இம்மாதிரி துர்குணம் உண்டாகவில்லை. ஆகவே இந்த துர்குணத்திற்கு வேறு ஏதாவது காரணமிருக்கலாமோ என்று நினைக்கும்படி யிருந்தது. மற்ற கேசுகளில் சிலருக்குக் குமட்டல் இருந்தது. சாதாரணக் குமட்டல்களில் மருந்தை நிறுத்தாமலே கொடுத்து வந்ததில் சில நாட்களில் மருந்து உடம்புக்கு ஒத்துப்போய் துர்குணமின்றி யிருந்தது. Leprosy என்ற குஷ்ட நோயில் கொடுத்தபொழுது ஆரம்பத்தில் சில நாட்களில் உள்ளங்கால்களில் எரிச்சல் கண்டு உள்ளங்கால்களில் ஓர் தோல் கழண்டு விட்டது. வியாதி பூராவும் குணமடைந்தது மேற்படி நோயாளிக்கு ஆங்கில சிகிச்சையில் நூறு இன்ஜக்ஷன் கொடுத்தும் குணமின்றி சில வருஷங்கள் கழித்துப் பிறகு தாளக பஸ்ம சிகிச்சை கொடுக்கப்பட்டது. ஓர் க்ஷய நோயில் தாளக பஸ்மம் கொடுத்து வந்ததில் மலம் இளகி, பேதியாக தினம் மூன்று அல்லது நான்கு தடவை கழிந்தது. இரண்டு நாள் மருந்தை நிறுத்தினவுடன் அத்துர்க்குணம் விலகிவிட்டது. பல வருஷங்களாக நாம் உபயோகித்து வந்ததில் மேலே சொன்ன துர்க்குணங்களே காணப்பட்டன. பலருக்கு ஒருவித துர்க்குணமும் காணப்படவில்லை. குஷ்ட நோய்களில் முதல் மாதத்திலேயே குணம் ஆரம்பிக்கின்றது. நோய்க்குத் தக்கபடி ஆறு மாதம் முதல் ஒரு வருஷம் வரை உபயோகிக்க வேண்டியதாகின்றது. சாதாரண இருமல்களில் 15 நாள் முதல் ஒரு மண்டலம் வரை உபயோகிக்க வேண்டியதாகின்றது

தாளக சுத்தி — தாளகத்தைக் கடலை போல நறுக்கி ஓர் துணியில் கட்டி காடியில் சுண்ணாம்புக்கல் கலந்து அதில் தோலா யந்திரமாகத் தொங்கவிட்டு ஒரு யாமம் எரிக்கவும். பிறகு பூசணிக்காய் ரஸத்திலும், திரிபலை கஷாயத்திலும், நல்லெண்ணையிலும் ஒரு யாமம் எரிக்கவும். நல்லெண்ணையில் எரிக்கும்பொழுது ஜலத்தைக் கலந்து எரிக்கவும். இல்லாவிட்டால் நல்லெண்ணையில் தீப்பற்றி தாளகம் எரிந்துவிடும். குறிப்பு — நூல்களில் இவ்விதம் கூறப்பட்ட போதிலும் நாம் அனுபவத்தில் செய்துவரும் முறையாவது — சுண்ணாம்புக்கல்லை ஓர் சட்டியில் சுமார் அரைப்படி போட்டு அதில் முன் சொன்னபடி தாளகத்தை ஓர் துணியில் முடிந்து இரண்டுபடி பச்சை ஜலம் விட கொதிக்கும். கொதி ஆறின பிறகு அடுப்பேற்றி இரண்டு

மணி எரித்து ஆறவிட்டு துணிக்குள்ளிருக்கும் தாளகத்தை நீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும் தாளக பஸ்மம்—(1) புரசம் வேர் கஷாயம் செய்து அந்தக் கஷாயத்தை வடிகட்டி ஓர் பாண்டம் அல்லது இரும்பு சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரித்து தேன் போல கெட்டியாக ஆகும் பதத்தில் எடுத்துக்கொண்டு அதால் தாளகத்தை மூன்று தடவை பாவனை செய்து பிறகு அந்த தாளகத்தை எருமை மூத்திரத்தில் அரைத்து வில்லைதட்டி அகலில் வைத்து முழுவதும் சீலைமண் செய்து பத்து எருவில் புடமிடவும். இவ்விதம் பத்து புடமிட பஸ்மமாகும். குறிப்பு — இந்தமாதிரியான லகுபுடங்களில் முடியும் பஸ்மங்கள் நெருப்பில் போட்டால் புகையும். தாளக பஸ்மத்திற்கு லக்ஷணம் ஆயுர்வேத பிரகாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "தாளகம் ம்ருதம் தகா க்யேயம் வஹ்நிஸ்தம் தூமவர்ஜிதம் | ஸதூமம் நம்ருதம் ப்ராஹு: ஷிருத்தவைத்ய இதி ஸ்திதி; ||" தாளக பஸ்மத்தைத் தணலில் போட்டால் புகை வராமலிருந்தால் அது உயர்ந்த பஸ்மமாகும். புகை வருமாகில் அது சரியான பஸ்மமல்ல என்பது பெரியோர்களின் கொள்கை என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

தாளக பஸ்மம்:— (2) சுத்தி செய்த தாளகத்தைக் குதிரை லத்திச் சாற்றில் ஏழு பாவனை செய்து பிறகு பில்லைதட்டி ஓர் மண் சட்டியில் பாதியளவு குதிரை லத்தியை யடைத்து அதில் அந்த பில்லையை வைத்துப் பிறகு மேலும் குதிரை லத்தியைப் போட்டு வாய்க்கு அகல் மூடி சந்து வாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து கஜபுடமிடவும் ஆறவிட்டு எடுக்க பஸ்மமாகும். குறிப்பு:—தாளகக்கட்டியின் அடியில் ஓர் அப்பிரகத்தகட்டையும் கட்டிக்கு மேல் ஓர் அப்பிரகத் தகட்டையும் வைத்துக்கொண்டு குதிரை லத்தியாலடைத்துப் புடமிட்டால் லத்திச்சாம்பல் கலக்காமல் தாளக பஸ்மத்தை எடுத்துக்கொள்ளலாம். கஜபுடமென நூல்களில் கூறப்பட்டாலும் வராஹபுடம் போடுவது சரியாகவிருக்கின்றது. முன் சொன்ன பஸ்ம முறையை விட இது உத்தமமாகும். தாளக பஸ்மம்: (3) சுத்தி செய்த தாளகத்தை ஓர் மண் வாணயில் வைத்து அடுப்பேற்றி வெங்காயச்சார் அரைப்படி சுருக்கு கொடுத்துப் பிறகு அந்த தாளகத்தை வெங்காயச்சார் விட்டு அரைத்து பில்லை கட்டி காய வைத்து அந்த பில்லைக்கு மேல் 7-8 வரிசை துணி சுற்றி முழ உயரம் உமி கொட்டி உமியின் நடுவில் அதை வைத்து நெருப்பிட தாளகம் உருகி உமியின் மேல் குருணைபோல் படியும். அதை எடுத்துச் சாம்பல் நீக்கி கல்வத்திலிட்டும் பொடி செய்து அரிசியிடை தேன் முதலிய அனுபானங்களில் ஆறு வேளை கொள்ள காசம் நீங்கும். அவசியமானால் சில நாள் விட்டு மறுபடியும் ஆறு வேளை உபயோகிக்கலாம். இது சற்று கடுமையான குணமுள்ளது. தாளக பஸ்மம்:— (4) ஒரு பலம் சுத்தி செய்த தாளகத்தைச் சோற்றுக்கற்றாழை ரஸத்தால்



அரைத்து உலர்த்தி ஓர் சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி 12 யாமம் எரிக்க பஸ்மமாகும். தாளக பஸ்மம்:— (5) தாளகத்தை அரசம்பட்டை கஷாயத்தில் இருபது பாவனை செய்து பிறகு பில்லை செய்து காய வைத்து ஓர் சட்டியில் பாதி வரை அரசம்பட்டை சுட்ட சாம்பல் போட்டு அதன் நடுவில் பில்லையை வைத்து ஷை சாம்பலால் சட்டியை நிரப்பி வாய் மூடி சீலை செய்து காயவைத்துக் கஜபுடமிட பஸ்மமாகும். (6) தாளகம் ஓர் இடை, ஓட்டடை இரு இடை எடுத்து ஓர் சட்டியில் பாதியளவு அரசம்பட்டைச் சாம்பல் போட்டு அதன் மேல் ஓட்டடைப் பொடியில் பாதி பரப்பி அதில் தாளகத்தை வைத்து அதன் மேல் மீதி பாதி ஓட்டடைப் பொடியைப் போட்டு அதன் மேல் சாம்பலைச் சட்டி நிறையக் கொட்டி மேல் மூடி நான்கு யாமம் எரித்து ஆற விட்டு எடுக்கப் பஸ்மமாகும் தாளக பஸ்மம்:— (7) தாளகத்தைத் தும்பைச்சாற்றில் ஏழு நாள் அரைத்து உலர்த்தி ஓர் சட்டியில் போட்டு வாய்க்கு மூடி சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி எட்டு யாமம் எரித்து அதை எடுத்து அதே சாற்றால் மூன்று நாள் அரைத்து மறுபடியும் முன்போல எரிக்கவும். இவ்விதம் ஏழு தடவை எரிக்கத் தாளகம் மேல் பதங்கிப்பது நின்று சட்டியின் அடியில் தங்கி விடும். பிறகு எருக்கம் பாலால் ஒரு நாள் அரைத்து முன் போல எரிக்கவும். இது கலக்குஷ்டம், விக்கம், வாதாக்தம், முதலியவைகளைப் போக்கும், பிரங்கம் என்ற Syphilis நோயில் மிகுந்த நன்மை செய்யும். தாளக பஸ்மம்:— (8) தாளகத்தை வெள்ளைச்சாரணத்தி கஷாயத்தில் ஒரு நாள் அரைத்து அதை ஒரே உருண்டை அல்லது பில்லையாகச் செய்து வெய்யிலில் நன்றாகக் காய வைத்து ஓர் சட்டியில் பாதியளவு ஷை சாரணத்திச் சாம்பலைப் போட்டு அமுக்கி அதன் நடுவில் அந்தத் தாளகப்பில்லையை வைத்து அதன் மேல் சட்டி நிறைய ஷை சாம்பலைக்கொட்டி வாய் மூடி சீலைமண் செய்து உலர்த்தி காடாக்னியாக ஐந்து நாள் கைவிடாமல் எரிக்கவும். ஆறவிட்டு எடுக்கப் பஸ்மமாகும். இது பாவப்பிரகாசம் என்ற நூலில் சொல்லப்பட்ட முறை. இதைப் பல தடவைகளில் நாம் செய்து அனுபவித்திருக்கிறோம். விஸர்ப்பம் மண்டலம் குஷ்டம், பிரங்கநோய் (இதைத் தமிழில் பரங்கி நோய் என்பர்) முதலிய நோய்கள் நீங்கும். இந்த ஒரு மருந்தைச் சரியாக முடித்துத் தகுந்த அனுபானத்துடன் உபயோகிக்கப் பல நோய்கள் விலகும். இது உத்தமமான முறை. க்ஷயம், காசம், முதலிய சகல ரோகங்களையும் விலக்கும். குறிப்பு:— தாளக பஸ்மம் எந்த முறைப்படி செய்த போதிலும் வேளைக்கு இரண்டு அரிசியிடைக்கு மேல் உபயோகிக்கக் கூடாது. சில சரீரக்கூறுகளை யொட்டி அதிக அளவிலும் உபயோகிக்கலாம். சிலர் தாளக பஸ்மம் செய்வதாகச் சொல்லி ஏமாற்றுவதுண்டு. அதாவது தாளகத்தையும் சீனிக்காரம் (இதுவே படிக்காரம் எனப்படும்) என்ற கடைச்சரக்கையும் சேர்த்து ஏதாவது ஓர் ரஸம் விட்டு

அரைத்துக் காய வைத்து அகலில் வைத்து மூடி சீலைமண் செய்து கஜபுடம் இட தாளகம் நெருப்பில் போய் சீனிக்காரம் மாத்திரம் பஸ்மமாகும் அது மிகவும் வெளுப்பு நிறத்துடன் புரைபுரையாகக் காணும். இதைத் தாளக பஸ்மமெனச் சொல்லிக்கொடுப்பதுண்டு. உண்மையில் இந்த பஸ்மமும் சில நோய்களை அரிசியிடை அளவில் உட்கொண்டால் விலக்குகின்றது. இது மோரே சுவரர் என்ற ஒரு வைத்தியர் நூலில் காணுகின்றது. தாளக பஸ்மம் :— (9) புரசம்பட்டையைச் சுட்டுச் சாம்பலாக்கி அச்சாம்பலை ஓர் சட்டியில் பாதி வைத்து அதன் நடுவில் தாளகத்தை வைத்து மேல் சாம்பல் கொட்டி வாய் மூடி ஒரு நாள் எரிக்கப் பஸ்மமாகும். குறிப்பு :— தாளகத்தை இவ்விதம் எரிப்பு முறைகளில் பஸ்மம் செய்வதுதான் உத்தமம் புடமிடுவதால் பஸ்மமாகிய போதிலும் குணமற்று விடுகின்றது. தாளக பஸ்மம் :— (10) தாளகத்தைச் சுண்ணாம்பு நீரால் அரைத்துக் காயவைத்துப் பிறகு நாயுருவி சமூலம் சுட்டுச் சாம்பல் செய்து அதில் ஜலத்தை விட்டுத் தெளிவு இறுத்து அந்தத் தெளிவு நீரால் அரைத்துப் பில்லை தட்டிக் காய வைத்துப் பிறகு ஓர் சட்டியில் பூசணிக் கொடியை உலர்த்திச் சுட்டுச் சாம்பலாக்கி அந்த சாம்பலை பாதியளவு கொட்டி அதன் நடுவில் யவக்ஷாரத்தையும் பொடி செய்து பரப்பி அதில் ஷை பில்லையை வைத்து மேலும் யவக்ஷாரத்தாள் பில்லைக்குப் பரப்பி அதன் மேல் ஷை சாம்பலைச் சட்டி நிறையக் கொட்டி வாய் மூடி 12 மணி அடுப்பேற்றி காடாக்னியாக எரித்து ஆற விட்டு எடுத்து முன் போல உபயோகிக்கக் குஷ்டம் முதலியவை நீங்கும். குறிப்பு :— நூல்களில் சட்டியின் அடியில் யவக்ஷாரம் பரப்பி அதன் மேல் சட்டி நிறையச் சாம்பலைக் கொட்டி எரிக்கும்படி காணப்படுகின்றது. இம்முறையில் சில அசௌகரியமிருப்பதுபற்றி மேல் சொன்ன விதமாகச் செய்வது வழக்கம். இதுவும் உத்தமமான முறை. தாளக பஸ்மம் :— (11) பூசணி ரஸத்தில் தாளகப் பொடியைப் பாவனை செய்து பிறகு காடி அல்லது எலுமிச்சம்பழ ரசத்தில் பாவனை செய்து பிறகு சுத்த நீரில் கழுவி உலர்த்தி ஓர் மண் சட்டியின் நடுவில் அத்தாளகத்தை வைத்து மேல் சட்டி மூடி இலந்தைத் தழையை அரைத்து அந்த விழுதால் சந்து வாய் மூடி அடுப்பேற்றி அடிச்சட்டி சிவக்கும் வரையில் எரித்து ஆற விட்டு எடுத்துப் பார்க்க மாணிக்கம் போல சிவந்த நிறமான சிந்தூரம் காணும் வாதரக்தம், பகந்திரம், புரையோடும் புண்கள், குஷ்ட நோய்கள் முதலியன விலகும். இதற்கு ரஸமாணிக்யமெனப் பெயர். இதுவும் உத்தமமான முறை.

6. மனோசிலை :— இது கடைகளில் எங்கும் கிடைக்கும் சரக்கு. இச்சரக்கு சிகப்பாக விருக்கும். மிகவும் சிகப்பாக விருப்பதாகப் பார்த்து எடுத்துக்கொள்ள வேண்டும். இது தனித்தும்



கூட்டு மருந்துகளுடனும் உள்ளுக்கு உபயோகமாகின்றது. தமிழ் நூல்களில் இதன் உபயோகம் அதிகமாகக் கூறப்படவில்லை. வடமொழி நூல்களில் பல கூட்டு மருந்துகளில் இது சேருகின்றது. இது காஸம், க்ஷயம், காய்ச்சல், இவைகளில் விசேஷித்து குணம் கொடுக்கின்றது. தாளகத்திற்கு அடுத்தபடியாக இதைச் சொல்லலாம். மனோசிலை சுத்தி— இதைப் பொடி செய்து அகத்தி ரஸத்தால் ஏழு பாவனை செய்து உலர்த்தவும். சுத்தியாகும். மனோசிலை சுத்தி— இஞ்சி ரஸத்தால் முன்போல பாவனை செய்யச் சுத்தியாகும். தாளகத்தைப் போலவே இதையும் எரித்துப் பஸ்மம் செய்து கொள்ளலாம் தாளகத்தின் அளவு போலவே இதையும் உள்ளுக்கு உபயோகிக்கவும். தேன் அனுபானம் அல்லது தகுந்த அனுபானத்தில் கொடுக்கலாம். இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக உபயோகித்தாலும் துர்குணம் இருப்பதில்லை. கூட்டு மருந்துகளில் பஸ்மம் செய்து சேர்ப்பதில் நல்ல குணம் காணுகின்றது.

7. அஞ்சனக்கல் :— இது பூமியில் கிடைக்கும் பிறவிச் சரக்கு சாதாரணமாகக் கடைகளில் கிடைக்கும். இதை ஹிந்தியில் ஸுர்மா என்றும், ஆங்கிலத்தில் Antimony என்றும் சொல்லுகின்றனர். இது ஆங்கிலத்தில் ஔஷத முறைகளில் சேருகின்றது Kalaazar என்ற ஓர் நோயில் இதை இன்ஜக்ஷன் செய்வதில் மிகுந்த பலன் காணுவதாகச் சொல்லப்படுகின்றது தமிழிலும் அஞ்சனக்கல் என்றே அழைக்கின்றனர். நமது நூல்களில் இதன் உபயோகம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. நூல்களில் இந்த அஞ்சனக்கல் ஐந்து விதமாகக் கூறப்படுகின்றது. சௌவீராஞ்சனம், ரஸவீராஞ்சனம், ஸ்ரோதாஞ்ஜனம், புஷ்பாஞ்ஜனம், நீலாஞ்ஜனம், எனப்பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ரஸாஞ்ஜனம் என்பது நமது நூல்களில் பல முறைகளில் சேர்ந்து உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகப்படுகின்றது பிறவிச்சரக்கு மஞ்சள் நிறமாக விருக்குமென நூல்களில் சொல்லப்படுகின்றது ஆனல் பிறவிச் சரக்கான ரஸாஞ்ஜனம் நமக்குத் தற்காலம் கிடைப்பதில்லை. ஆகவே அதற்குப் பதிலாக ரஸாஞ்ஜனத்தை செயற்கை முறையில் தயாரித்து வடதேசக் கடைகளில் விற்கின்றனர். ரஸாஞ்ஜனம் செயற்கை முறை — மரமஞ்சளை இடித்துக் காஷாயம் செய்ய வேண்டும். அதாவது இருபது தோலா மரமஞ்சளை இடித்துச் சின்னப்படி. இரண்டரைப்படி சுத்த ஜலம் விட்டு அடுப்பேற்றி நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி. இரும்பு பாத்திரத்தில் அக்கஷாயத்தை அரைக்காபடி ஆட்டுப்பாலுடன் சேர்த்து அடுப்பேற்றி மெழுகாக ஆகும் வரை எரித்து எடுத்து பத்திரப்படுத்தவும். இதுவே ரஸாஞ்ஜனம் சேரும் முறைகளில் உபயோகிக்கப்படுகின்றது. அஞ்சனக்கல் முழுவதுமே கண் நோய்களில்

மேலுக்கு உபயோகப்படுகின்றது. அதிலும் விசேஷித்து ரஸாஞ்ஜனம் உபயோகப்படுகின்றது. மேலும் இந்த ரஸாஞ்ஜனம் அதிசார நோய்கள், ரக்தப் பெருக்கு இவைகளில் பல கூட்டு மருந்துகளுடன் சேருகின்றது. தற்காலம் கடைகளில் கருப்பு, வெளுப்பான அஞ்சனக்கல் கிடைக்கின்றது. இவற்றிற்கு முறையே நீலாஞ்ஜனம் என்றும் ஸௌவீராஞ்ஜனம் என்றும் பெயர். மற்றவைகள் கிடைப்பதில்லை யாகையால் அவைகளை லக்ஷணங்களுடன் நாம் எழுதவில்லை. நீலாஞ்ஜன ஸௌவீராஞ்ஜனங்களின் சுத்தி—நீலாஞ்ஜனத்தைப் பொடிசெய்து எலுமிச்சம் பழ ரஸத்தில் ஓர் பாவனை செய்து கடும் வெய்யிலில் ஒரு நாள் காயவைக்கச் சுத்தியாகும். கரிப்பான் ரஸத்தில் பாவனை செய்ய இருவித அஞ்சனமும் சுத்தியாகும். குறிப்பு—வனகுலித்தாஞ்ஜனம் என்ற ஓர் வித அஞ்சனக்கல் வடதேசங்களில் "சாகஸு" என்றும் "சிமிட" என்றும் இரு பெயர்களுடன் கடைகளில் கிடைக்கின்றது. அதை நன்றாகப் பொடி செய்து வஸ்திரகாயம் செய்து கண்களிலிட குழந்தைகளின் கண்நோய் சௌக்கியமாகும். இதைப் பஸ்மம் செய்யும்படி நூல்கள் கூறவில்லை.

8. கங்குஷ்டம்-கங்குஷ்டம் என்பது ஓர் விதக்கல் போன்ற கட்டியான வஸ்து உத்தர தேசங்களில் கிடைக்கின்றது. இதற்கு தமிழில் பெயர் கிடையாது. இது பேதியாகும் குணமுள்ளது. மஞ்சள் நிறமானது. ஹிமயமலையின் சுற்று மலைகளில் உண்டாவதாக நூல்கள் கூறுகின்றன. இதன் சுத்தி—சுக்கு கஷாயத்தில் மூன்று பாவனை செய்யச் சுத்தியாகும். குறிப்பு—இது சில மருந்துகளில் கூட்டுமருந்தாகச் சேருகின்றது. பிரசித்தமான நாராயண சூர்ணத்தில் இது ஓர் சரக்காகச் சேருகின்றது. இதைத் தனித்துக் கொடுப்பதில்லை. இவ்விதம் உபரஸங்கள் எட்டும் சொல்லி முடிந்தது. இனி சாதாரண ரஸங்கள் ஒன்பதென முன் சொன்னோம். அவையாவன—கம்பில்லம், பாஷாணம், நவாச்சாரம், சோகி, அக்னிஜாரம், கிரிசிந்தூரம், லிங்கம், மிருதார்சிங்கு ராஜாவர்த்தம், ஆகிய இவைகளே. இவைகளின் லக்ஷணங்களை இனிச் சொல்லுவோம்.

1. கம்பில்லம்—கம்பில்லமென்பது ஓர் பிறவிச் சரக்கு. இது செங்கல்பொடி போன்ற நிறத்துடனும் பொடியாகவும் இருக்கும். இது வாய்விளங்கத்தின் புஷ்பப் பொடியென சொல்லப்படுகின்றது. அது சரியல்ல. ஏனெனில் "ஸௌராஷ்ட்ரதேசே சோத்பன்ன:" என்று இவ்வஸ்து ஸௌராஷ்டிர தேசத்தில் விளைவதாக நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. வாய் விளங்க மரம் இந்தியா முழுவதும் காடுகளில் இருப்பதால் 'சௌராஷ்ட்ர தேசத்தில் விளைவதாகச் சொல்லுவது பொருந்த மாட்டாது. இது பேதிச் சரக்கு தனியாகக் கொடுப்பதில்லை.



சார்ங்கதரம், சக்ரதத்தம் இவைகளில் காணப்படுகின்றது. அவற்றிலும் கஷாய சரக்குகள் இந்த பதின்மூன்றே சொல்லப்பட்டுள்ளன. கஷாயம் போடுவதிலும் சரக்குகளின் எடையிலும் விசேஷம் காணப்படுகிறது. சார்ங்கதரத்தில் அடியில் வருமாறு கூறப்பட்டுள்ளது. அதாவது—உளுந்து, யாளிவிதை, யவம், மருதோன்றி வேர், கண்டங்கத்திரிவேர், சிறுகாஞ்சொரி வேர், பெருவாகை வேர், சிறுநெரிஞ்சில் வேர் இந்த எட்டு சரக்குகளையும் வகைக்கு தனித்தனி இருபத்தெட்டு தோலா எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி பதினான்கு விட்டு அடுப்பேற்றி சின்னப்படி மூன்றரையாக வற்றவைத்துக்கொள்ளவும். இல்லம் ஓடு, சணல் விதை, கொள்ளு, இலந்தைவேர். (இலந்தைக் கொட்டையென சிவதாஸஸேநர் எழுதுகிறார்) இந்த நான்கு சரக்குகளையும் தனித்தனியாக வகைக்கு தோலா ஐம்பத்தாறு எடுத்து நொறுக்கி (இங்கு கொள்ளு, உளுந்து ஆக இரண்டையும் நொறுக்கவேண்டிய அவசியமில்லை) ஓர் தனிப் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி இருபத்தெட்டு விட்டு அடுப்பேற்றி சின்னப்படி ஏழாக வற்றவைத்து வடிகட்டிக் கொள்ளவும். வெள்ளாட்டு மாமிசத்தைத் துண்டுகளாக்கி அறுபத்தி நான்கு தோலா எடுத்து சின்னப்படி நான்கு ஜலம் விட்டு அடுப்பேற்றி சின்னப்படி ஒன்றாக வற்றவைத்து வடிகட்டிக்கொள்ளவும். இந்த மூன்று கஷாயத்தையும் நல்லெண்ணை சின்னப்படி இரண்டையும் சேர்த்து அதில் கல்கதிரவியம் அடியில் சொல்லப்படும் விதமாக பனிரண்டு சரக்குகளை வகைக்கு தோலா இரண்டு எடுத்து இடித்துப் பொடி செய்து போட்டுத் தைல பதமாகக் காய்ச்சவேண்டும். கல்க திரவியங்களாவன — சிந்தில், கோஷ்டம் சுக்கு, அரத்தை. சாரணத்திவேர், ஆமணக்கு வேர், திப்பிலி, சதகுப்பை, குருந்தொட்டி வேர், முதியார்கூந்தல், சடாமாஞ்சி, மிளகு. ஆகியவைகளே. மஸ்து, காடி. என்ற திரவங்கள் சார்ங்கதரத்தில் சொல்லப்படவில்லை. சக்ரதத்த முறையாவது—சார்ங்கதரம் கூறியபடி கஷாயங்களை தனித்தனி மூன்று பானைகளில் போடவேண்டும். ஆனால் சரக்குகள் எடையும் ஜலத்தின் அளவும் பேதப்படுகின்றது அதாவது—சார்ங்கதரர் கூறியபடி முதல் எட்டு சரக்குகளை வகைக்கு தோலா நூற்றி அறுபது எடுத்து இடித்து சின்னப்படி இருபது ஜலம் விட்டு, சின்னப்படி ஐந்தாக வற்றவைத்து வடி கட்டவும். அடுத்த நான்கு சரக்குகளை வகைக்கு தோலா எண்பது எடுத்து சின்னப்படி பத்து ஜலம் விட்டு சின்னப்படி இரண்டரையாக வற்றவைக்கவும். வெள்ளாட்டு மாமிசம் தோலா இருபது எடுத்து இரண்டரைப்படி சின்னப்படியில் ஜலம் விட்டு அரைவேவீசம் சின்னப்படியாக வற்றவைத்து வடி கட்டவும். இவ்விதம் தனித்தனியாக வடிகட்டின கஷாயம் மூன்றும் சேர்ந்து மொத்தம் எட்டேவீசம் சின்னப்படியாகும். அதில் சார்ங்கதரப்படி கல்க திரவியங்களைப் போட்டு நல்லெண்ணை சின்னப்படி இரண்டும்

சேர்த்து காய்ச்சவும். போபதேவர் கல்க சாமான்களில் "சீடா" என்று ஓர் சரக்கு காணப்படுகிறது. அது ஸம்ஸ்கிருத பதமாகத் தோன்றவில்லை. ஹிந்தி பதமாகத் தோன்றுகிறது. பொருள் விளங்கவில்லை.

சுலோகம் 70—க்ஷார தைலம், பிண்ட தைலம்.

சத்திக்ஷாரம், யவக்ஷாரம், முள்ளங்கி சாம்பல், பால்காயம், சதகுப்பை, கோஷ்டம், சுக்கு, இந்துப்பு, சௌவர்சலவணம், பிடாலவணம், உத்பித லவணம், பூர்ஜ இலை, தேசாவரம், தேவதாரு, வசம்பு, நல்லமுருங்கைப்பட்டை, ரஸாஞ்சனம், கோரைக் கிழங்கு. வகைக்கு இரண்டு டிராம் நாற்பது கிரெயின்சு. இடித்துப் பொடி செய்து அதில் நல்லெண்ணை சின்னப்படி ஒன்று, வாழைத் தண்டுச் சார், மதுசுக்தம், கொம்மட்டி மாதளைச்சார் வகைக்கு சின்னப்படி நான்கு சேர்த்து அடுப்பேற்றி தைல பதமாக வடித்து வடிகட்டி காதுகளில் விட காதுநோய்கள் விலகும். இனி பிண்ட தைலம் சொல்லப்படுகிறது—மஞ்சிஷ்டி, நன்னாரி வேர், தேன்மெழுகு, அரத்தை, வகைக்குத் தோலா நான்கு, நல்லெண்ணை சின்னப்படி ஒன்று சேர்த்து தைல பதமாகக் காய்ச்சி மேலுக்கு உபயோகிக்க வாதரக்தம் போம்.

குறிப்பு:— இந்த சுலோகத்தில் இரண்டு தைலங்கள் சொல்லப்படுகின்றன. இரண்டும் மேல் உபயோகத்திற்கு மாத்திரம். அவற்றுள் க்ஷார தைலம் விவரிக்கப்படுகிறது. இது மிக பிரசித்தமான தைலம். பலர் தினப்படி உபயோகிக்கின்றனர். காது நோய்களில் காதில் விடும்படி சொல்லப்பட்டிருப்பதுடன் முக ரோகங்கள், நாசி ரோகங்களிலும் மேலுக்கு உபயோகிக்கலாம். முக ரோகங்களில் கொப்பளிக்கும் தைலமாக உபயோகிக்கலாம். மூக்கு ரோகங்களில் நஸ்யமாக விடலாம். இது வாக்படம் முதலிய நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. கல்க திரவியம் மொத்தம் பதினெட்டு. நல்லெண்ணை சேர்ந்து திரவ பதார்த்தங்கள் நான்கு. எல்லா நூல்களிலும் இவைகள் ஒரு மாதிரியே ஆனால் திரவ பதார்த்தங்களின் அளவில் பேதம் காணப்படுகிறது போபதேவரும் வாக்படரும் அளவை ஒரே விதமாகக் கூறுகின்றனர். அதாவது நல்லெண்ணை சின்னப்படி ஒன்று, மற்ற திரவ பதார்த்தங்கள் மூன்றும் வகைக்கு சின்னப்படி நான்கு என்கின்றனர். ஆனால் சக்ரதத்தத்தில் கர்ணரோக சிகித்சையில் கூறப்பட்டுள்ள க்ஷார தைலத்தில் மதுசுக்தம் சின்னப்படி நான்கு, மற்ற இரண்டு சார்களும் வகைக்கு சின்னப்படி ஒன்று என்ற அளவு சொல்லப்பட்டுள்ளது ஆகவே இந்த இரண்டு மதமும் ஏற்கத் தகுந்தது என சிவதாஸஸேனர் கூறுகின்றார். ஸ்மிருதிகளில் இரண்டுவிதமாக அனுஷ்டானம் காணப்பட்டால் எவ்விதம் இரண்டு விதங்களும் பிரமாணமோ அவ்வித



மே இந்த இரண்டு மதமும் நாம் ஏற்கத்தக்கது என்கிறார். இன்னும் பலவிதமான மதங்கள் இந்த க்ஷார தைலத்தில் காணப்படுகிறது அவை பிரமாணமல்லவென அவைகளைத் தள்ளி விட்டார். இந்த தைலம் சார்ங்கதரத்திலும் காணப்படுகிறது. அது சக்ரதத்தத்தை யொட்டி இருக்கின்றது இதில் வாக்படம் சக்ரதத்தம், போபதேவர் ஆகிய இவைகளில் "பூர்ஜக்ரந்தி" என்ற சொல் காணப்படுகிறது. இதை பூர்ஜ, க்ரந்தி என்று இரண்டு சொற்களாகப் பிரிக்கலாம். அப்பொழுது பூர்ஜபத்ரம், தேசாவரம் என்று இரு சரக்குகள் பொருளாகும். ஒரே சொல்லாக வைத்தால் பூர்ஜ இலை என்பது பொருளாகும். சார்ங்கதரத்தில் க்ரந்தி என்ற ஒரு சொல் இருக்கிறது. நியாயமாகப் பார்த்தால் அதற்கு தேசாவரம் எனப் பொருள் சொல்லுவதுதான் பொருந்தும். மற்ற நூல்களை அநுசரித்து க்ரந்தி என்பதற்கு பூர்ஜக்ரந்தி எனப்பொருள் கொள்வதானால் அப்பொழுது தேசாவரத்தை விலக்கவேண்டியதாகும். அப்பொழுது கல்க திரவியங்கள் மொத்தம் பதினேழு ஆகும். அப்பொழுது கல்க திரவியங்களை வகைக்கு ஒரு தோலாவாக எடுத்துக்கொள்ளவேண்டும் பூர்ஜகிரந்தி என்பது பூர்ஜமர இலையின் காம்பு என்பது பொருள். அது நமக்கு கிடைப்பதில்லை. இலைதான் கிடைக்கிறது. இனி "மதுசுக்தம்" தயாரிக்கும் விதத்தைச் சொல்லுகிறோம். எலுமிச்சப்பழ ரசம் சின்னப் படி. இரண்டு, தேன் தோலா முப்பத்திரண்டு இவைகளை ஓர் நெய் வைத்து பழகின சட்டியில் போட்டு அதில் தேசாவரம் தோலா பதினாறை இடித்துப் பொடிசெய்து போட்டு வாய்மூடி ஒரு மாதம் தான்யபுடம் வைத்து பிறகு வடிகட்டிக்கொள்ளவும். இது சக்ரதத்த முறை. எலுமிச்சம்பழ ரசம் சின்னப்படி இரண்டு தேன் தோலா முப்பத்திரண்டு இதில் திப்பிலிப் பொடி நான்கு தோலா சேர்த்து முன்போல தயாரிக்கவேண்டுமென்பது சார்ங்கதர முறை. இரண்டிலும் அதிக பேதமில்லையாதலால் ஏதாவது ஒரு முறைப்படி தயாரித்துக்கொள்ளலாம். முள்ளங்கி கிழங்குகளை பில்லையாக நறுக்கி வெய்யலில் காயப்போட்டு அதை சாம்பல் ஆக்கிக்கொள்ளவேண்டும் உத்பிதம் என்பது பூநீர். ரசாஞ்சனம் பிறவிச்சரக்கு. கிடைப்பதில்லையாகையால் மர மஞ்சள் கஷாயத்தால் தயாரித்த செயற்கை ரசாஞ்ஜனத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். கலியாண முருங்கை மரத்தின் பட்டையை எடுத்துக்கொள்ள வேண்டும். வாழைத்தண்டை இடித்து சார் எடுக்கவேண்டும் இனி பிண்டதைலம் கூறப்படுகிறது. இதில் பல விதங்கள் இருக்கின்றன. மலையாளத்தில் கை முறையாக ஓர் பிண்ட தைலம் உபயோகப்பட்டு வருவதை காம் பலவகை என்ற நூலில் வெளியிட்டுள்ளோம். அஷ்டாங்க ஹிருதயம் முதலிய பல நூல்களில் இது காணப்படுகின்றது. மொத்தம் நான்கு சரக்குகள் கல்கதிரவியம். இங்கு போப

தேவர் மூலத்தில் "க்ஷண" என்ற சொல் காணப்படுகின்றது. அதற்கு ஹிந்தி உரையில் அரத்தை என பொருள் கூறப்பட்டுள்ளது அது பிழை பாடம் எனத் தோன்றுகிறது. வாக்படத்தில் அந்த இடத்தில் சாம்பிராணியின் ஓர் பேதம் சொல்லப்பட்டுள்ளது கல்க திரவியங்கள் நான்கையும் வகைக்கு தோலா நான்கு எடுத்து அதில் தேன் மெழுகு நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடி செய்து அதில் நல்லெண்ணெ சின்னப்படி ஒன்று சுத்த ஜலம் சின்னப்படி நான்கு சேர்த்து தைல பதமாகக் காய்ச்சி வடிகட்டி உஷ்ணமாகவிருக்கும்போதே அதில் தேன் மெழுகைப் போட சில மணிகளில் கரைந்துவிடும். மேலுக்கு மாத்திரம் உபயோகிக்கலாம். இதே தைலத்தில் அதிமதுரம் சேர்ந்து ஐந்து கல்கதிரவியத்தால் காய்ச்சவேண்டுமென்று சார்ங்கதரரும், இந்த ஐந்து திரவியங்களுடன் பால் நான்கு மடங்கு சேர்த்து தயாரிக்கும் மற்ற ஒரு வகையை சக்ரதத்தமும் கூறுகிறது. மற்றவைகளைப்போல் இதையும் வடிகட்டி எடுப்பதா அல்லது வாயகன்ற பெரிய பாத்திரத்தில் நிறைய நீர் நிரப்பி அதில் இந்த வடித்த தைலத்தை வடிகட்டாமல் போட்டு தண்ணீரில் மிதக்கும் எண்ணெயை எடுத்து உபயோகிப்பதா என்று இரண்டு மதங்கள் உண்டு. வடிகட்டி எடுத்துக்கொள்ளும் மதமே வழக்கத்திலுள்ளது.

சுலோகம் 71. சதாவரீ தைலம்.

நன்னாரி, அமுக்கரா வேர், சதகுப்பை, சடாமாஞ்சி, விருத்ததாரகம் வேர், தகரபாதுகா, கோஷ்டம், மேதா, சாரணத்தி வேர், மஞ்சிஷ்டி, அரத்தை, ஏலம், வசம்பு, குருந்தொட்டி வேர், மூவிலை வேர், சந்தனத்தூள், தேவதாரு இவைகளைப் பொடி செய்து கல்கமாகப் போட்டு நல்லெண்ணெ சின்னப்படி ஒன்று, தண்ணீர்விட்டான் கிழங்கு ரஸம், பசும்பால் வகைக்குச் சின்னப்படி இரண்டு சேர்த்து தைல பதமாகக் காய்ச்சி வடிகட்டி உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்க வாதநோய், வாதரக்தம், குடல்வாதம், க்ஷயம், குஷ்டம் கிழட்டுத்தனம், வாய் உலறுதல், காது செவிடு. வ்யங்கம் என்ற நோய், ரக்தபித்தம், ஜ்வரம், ஆகிய இவை போம்.

குறிப்பு—இம்முறை வேறு நூல்களில் காணப்படவில்லை. சார்ங்கதரத்தில் சொல்லப்பட்டுள்ள சதாவரீ தைலம் வேறு முறை. இதில் கல்கதிரவியம் மொத்தம் பதினேழு. வகைக்குத் தோலா ஒன்று இடித்துப் பொடி செய்து போடவும்.

179587

சுலோகம் 72 வஜ்ரக தைலம்.

சிறுதேக்கு, கடம்பமரப்பட்டை, சுக்கு, இந்துப்பு, மனோசிலை ஸ்வர்ணக்ஷீரி, நிலக்கடம்பு வேர், நாழல், நொச்சி வேர் மருக்காள

மதராஸ் ப்ரோவின்ஷியல் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்,
X 185, அடையாறு, மதராஸ்.

பிரஸிடெண்ட்: வைத்யரத்ன கேப்டன் G. ஸ்ரீனிவாசமூர்த்தி.
பி.எ. பி.எல். எம்.பி.ஸி.எம்.

## அறிக்கை.

1 ஆயுர்வேத, சித்த, யூனனி தேசீய மருந்துகள் சாஸ்திர சம்பந்தமாயும் தக்க மேல் பார்வையுடனும் தயார்செய்து தேசீய மருந்துகள் கையாளப்பட்ட டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதராஸ் ப்ரோவின்ஷியல் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி ஸ்டோர்ஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும், மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்.

2. தேசீய இந்திய டாக்டர்களும், இதா விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களுக்கும் மாத்திரம் மேற்கண்ட சொஸைடியில் மெம்பராகச் சேரலாம்.

3. ஒரு பங்கின் விலை 5 ரூபாய், பிரவேச கட்டணம் பங்கு 1-க்கு 4 அணு கட்டவேணும். ஒரு மெம்பர் 1000 பங்கு வரை எடுத்துக் கொள்ளலாம். ஆனல் பிரவேசக் கட்டணம் எல்லா பங்குகளுக்கும் கட்டவேண்டியது 5 ரூபாய்தான்.

4. மேல்கண்ட சொஸைடியில் நடந்த 3 வருஷத்தில் லேவாதேவி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | 1945-46 | 1946-47 | 1947-48 |
|---|---|---|---|---|
| 1. | மெம்பர்கள் (தேசீய டாக்டர்கள்) | 261 | 364 | 442 |
| 2. | பங்குத் தொகை | 12,985 | 14,135 | 16,160 |
| 3. | மருந்து விற்பனை | 68,589 | 1,15,683 | 1,38,348 |
| 4. | லாபம் | 6,000 | 15,085 | 40,522 |
| 5. | பங்குக்கு வட்டி (பைலாவில் எற்பட்டபடி) | 5% | 5% | 5% |
| 6. | மருந்து வாங்கியதின் பேரில் லாபம் | 1 ரூபாய்க்கு 1 பை வீதம். | 1 ரூபாய்க்கு 4 பை வீதம். | 1 ரூபாய்க்கு. 6 பை வீதம் |

5. தேசீய வைத்தியர்கள் யாவரும் மேல்கண்ட சொஸைடியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைடியின் லேவாதேவியை அபிவிருத்தி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வை. கோண்டல் ராவ்,
காரியதரிசி.

V.P.A.

JUL 1951
MADRAS




வைத்ய வாசஸ்பதி

**பண்டிட் P. S. ராமசர்மா**

அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட
கைகண்ட பலனளிக்கும்.

**"சக்தி ஸஞ்சீவி"**

(REGD.)

*குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.*

எங்கும் கிடைக்கும்!

*தயாரிப்பவர்:—*

**ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,**
கரூர் S. I. Ry.


Published by Pandit P. S. Rama Sarma for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Vadivel Press, Karur